மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 24 திங்கட்கிழமை 23.12.2024 கதிர் 74

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# சொன்னது எதையும் அனுரா செய்யவில்லை!




## - அரசு மீது கோவிந்தன் கருணாகரம் குற்றச்சாட்டு -

**அரசியல் கைதிகள் ஒருவர் கூட இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை அதேபோன்று வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் ஆயிரக்கணக்கான காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர் அவ்வாறு திணைக்களங்களான பாடசாலை போன்றவற்றின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது இவைகள் எதுவும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்றும், ஜனாதிபதியாக கோட்டாபய ராசபக்ச வந்ததும் சிறுபான்மை சமூகங்களை எப்படி கணிப்பிட்டாரே அதில் எந்தவித மாற்றமும் இல்லாமல் தற்போதைய ஜனாதிபதியும் அவருடைய கட்சியும் நடாத்துகின்றது என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு வாவிக் கரையிலுள்ள அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீண்டும் ஒருமுறை இந்திய சீனாவின் அதிகார போட்டியில் சிக்கி இருக்கின்றது சர்வதேச அரசியல் அப்படி இருந்தாலும் கடந்த காலத்தில் போராட்ட இயக்கமாக இருந்த தேசிய மக்கள் சக்தி இன்று ஆட்சியை பிடித்துள்ளனர். இவர்கள் ஆட்சியை பிடிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தல் விஞ்ஞாபனத்திலே வடக்கு, கிழக்கை மையமாக வைத்து 7➤

# முறைகேடாக நடந்த பொலீஸாருக்கு உடனடியாகத் தற்காலிக இடமாற்றம்!

## - குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை உறுதி -

சந்தகத்தின்பேரில்கைது செய்யப்பட்டிருந்த ஒருவரை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தி, தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் மிரிஹான பொலிஸ் தலைமையகத்துக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பிரபல நடிகை மாதவி அந்தோணியின் கணவரும், பிரபல எழுத்தாளருமான கசுன் மகேந்திர ஹினடிகல, தனது வீட்டுக்கு அருகிலுள்ள கடை ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த வேளையில், சிவில் உடையில் நின்ற மூன்று பேர் கசுன் மகேந்திர ஹினடிகலவிடம் தேசிய அடையாள அட்டையைக் கேட்டுள்ளனர். வீட்டுக்கு அருகில் என்பதனால் தான் அதை எடுத்துவரவில்லை என்று அவர் தெரிவித்திருந்த போதிலும், அநாகரிகமான முறையில் நடந்து கொண்டதோடு, தனது கைகளைக் மடக்கிப் பிடித்துத் துன்புறுத்தியபடி தன்னை முச்சக்கரவண்டி ஒன்றில் அத்துருகிரிய பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதோடு, தொலைபேசி மூலம் தனது மனைவிக்குத் தெரியப்படுத்தியதும், அவர் தனது கைக்குழந்தையையும் வீட்டில் விட்டுவிட்டுப் பொலீஸ் நிலையத்துக்கு வந்த போது, தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தேவையற்ற முறையில் சட்டத்துக்கு முரணாக இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் தான் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கசுன் மகேந்திர ஹினடிகல தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பதில் பொலீஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை 7➤

## தவணை நாள்கள் அறிவிப்பு!

(கொழும்பு, டிச. 23)

அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் 2024 ஆம் ஆண்டு மூன்றாம்தவணையின் இரண்டாம் கட்டம் ஆரம்பிப்பது தொடர்பாக கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

மூன்றாம்தவணையின் இரண்டாம் கட்டத்துக்காகப் பாடசாலைகள் எதிர்வரும் 02 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 7➤

## உள்ளூராட்சி சபை தேர்தல் சட்டத்தை திருத்திய பின்னரே திகதி அறிவிப்பு!

(கொழும்பு, டிச. 23)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை தேர்தல் திகதியை அறிவிப்பதற்குச் சட்டரீதியான தடை நிலவுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டவுடன் உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சட்டத்தில் அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்குள் திருத்தம் மேற்கொள்ளப்படும் என பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இந்த சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டு 7➤

# டிஜிற்றல் அடையாள அட்டை அடுத்த மாதம் அறிமுகமாகும்!

(கொழும்பு, டிச. 23)

இலங்கையில் தனித்துவமுடைய டிஜிற்றல் அடையாளச் செயற்றிட்டம் அடுத்த மாதம் முதல் அமலுக்கு வரவுள்ளது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் தனித்துவ அடையாளங்களை வழங்கும் வகையில் டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கும் செயற்றிட்டத்துக்கு இந்திய அரசாங்கம் தொழில்நுட்ப உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கவுள்ளது.

இந்தியாவின் ஆதார் அட்டையை ஒத்ததாக இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்படும் டிஜிற்றல் அடையாள அட்டைகளைப் பாவனைக்குக் கொண்டுவந்த பின்னர் அஸ்வெசும போன்ற அரச சமூக நலத்திட்டங்களின் பயனாளிகள் நேரடியாகக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு இயலுமாகையால், மோசடிகள் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியும்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, இலங்கையை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கான இந்திய உதவியை வலியுறுத்தியிருந்தார். அதற்கமைய இலங்கையின் டிஜிற்றல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனம் ஆகியவற்றினால் இந்த டிஜிற்றல் அடையாள அட்டைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்திய - இலங்கைக் கூட்டு அனுசரணையுடனான இந்தச் செயற்றிட்டத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை அடுத்த 7➤

# தேசிய அருங்கலைகள் பேரவைத் தலைவராக கலாநிதி ஆயிஷா !

(கொழும்பு, டிச. 23)

தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவராக நவநாகரீக வடிவமைப்பு நிபுணர் கலாநிதி ஆயிஷா விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி அதற்கான நியமனத்தை வழங்கினார்.

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய அருங்கலைகள் பேரவை, உள்ளூர் கைவினைத் துறையை மேம்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றுகிறது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி ஆயிஷா விக்கரமசிங்க, 2006 ஆம் ஆண்டு முதல் நவநாகரீக வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

இலங்கை, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்காவிலிருந்து பிராண்ட் விளம்பரம் மற்றும் வடிவமைப்பில் விரிவான தொழில்முறை அனுபவத்தை கொண்டவர்.

காலி சவுத்லண்ட்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான கலாநிதி ஆயிஷா விக்கிரமசிங்க மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாடுத் துறையில் பட்டம் பெற்றார். அவர் லண்டனில் உள்ள கலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், இலங்கையின் காட்சி மற்றும் ஆற்றுகைக் கலைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றவராவார். (ஐ-05)

# கல்முனையில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று திங்கட்கிழமை (23) காலை வேளையில் கல்முனை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி ஹோட்டல் ஒன்றில் பணியாற்றி வந்த செல்லத்துரை வீதி, பெரிய நிலாவனை 01 சேர்ந்த பூசாரி சந்திரன் (வயது 54) என்பவரே மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கல்முனை வடக்கு வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகவத்தை கிரீட் உப மின்நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பு!

இலங்கை முதலீட்டுச் சபையின் வாகவத்தை மற்றும் மில்லனிய கைத்தொழில் வலயங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக வாகவத்தை கிரீட் உப மின்நிலையம் பிரதானமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்காக இலங்கை முதலீட்டுச் சபை 2,300 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது.

இந்த நிலையில், கடந்த 19ஆம் திகதி புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வாகவத்தை கிரீட் உப மின்நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

வாகவத்தை கிரிட் உப மின்நிலையம் முழுமையாக இலங்கை மின்சார சபை ஊழியர்களின் உழைப்பு பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட முதற்கட்ட உப மின்நிலையம் ஆகும். இலங்கை முதலீட்டுச் சபையினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 05 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த புதிய கிரிட் உப மின் நிலையம், தற்போதுள்ள கைத்தொழில்களுக்கு மின்சார விநியோகத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் தரத்தை மேம்படுத்தல், எதிர்கால தொழில்களுக்கு நிலையான மற்றும் தரமான மின்சாரத்தை வழங்குவதற்காக 90 எம்.வி.ஏ திறன் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பரிமாற்ற கட்டுமானத் திட்டத்தின் (TCP) கிளை, இந்த புதிய கிரிட் உப மின் நிலையத்தை வடிவமைத்து, நிர்மாணித்து மற்றும் ஒருங்கிணைத்து வருகிறது.

# ரயிலில் பாய்ந்து உயிரிழப்பு

*(கொழும்பு, டிச. 23)*

*பிரான்ஸில் புலம்பெயர் யாழ்ப்பாண தமிழர் ஒருவர் ரயிலில் பாய்ந்து உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.*

*பிரான்ஸ் -லாச்சப்பல் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இருபிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.*

*யாழ்ப்பாணம் தீவு பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர், குடும்பத்துடன் பிரான்சில் வாழ்ந்து வருகின்றார்.*

*இந்நிலையில் கடந்த வெள்ளியன்று (20) குடும்பஸ்தர் அதிவேகமாக செல்லும் ரயிலில் பாய்ந்து உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.*

*இந் நிலையில் அவரது விபரீத முடிவுக்கான காரணம் வெளியாகாத நிலையில், இச்சம்பவம் பிரான்ஸ் வாழ் தமிழர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)*

# கோழி இறைச்சி தொடர்பில் வெளியான தகவல்

*(கொழும்பு, டிச. 23)*

*பண்டிகை காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைக்கான தட்டுப்பாடு ஏற்படாதென அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*போதுமான கையிருப்பின் ஊடாக தேவைக்கேற்ப சந்தையில் கோழி இறைச்சி விநியோகம் இடம்பெறுவதாக சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.*

*ஒரு கிலோகிராம் குளிரூட்டப்பட்ட கோழி இறைச்சியை 1000 ரூபாவுக்கும் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியுமென அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர கூறியுள்ளார்.*

*முட்டையொன்றின் விலை 31 ரூபா முதல் 33 ரூபாவுக்கு இடைப்பட்ட தொகையில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)*

# நாட்டில் டெங்கு நோயாளிகள் அதிகரிப்பு

(கொழும்பு, டிச. 23)

நாட்டில் மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதுடன், சமீப நாட்களில் கூடுதலான டெங்கு நோயாளிகளும் இனம் காணப்பட்டுள்ளன.

2024ம்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 47,599 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் குறிப்பாக குருநாகல், அநுராதபுரம் போன்ற பிரதேசங்களிலும் அண்மைக் காலமாக டெங்கு தீவிரமாகப் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் இதுவரை 91 பேர் டெங்குத்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“யாழ்ப்பாணத்தில் அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து, டெங்குத் தொற்று மிகையாக அதிகரித்து வருகின்றது.

இதன்படி, நவம்பர் மாதத்தில் 134 பேரும், டிசம்பர் மாதத்தில் 91 பேரும் டெங்குத் தொற்றுக்கு ஆட்பட்டுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் தங்களின் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாகப் பேணுவது அவசியம்” என்றார்.

# திருகோணமலையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு

(திருகோணமலை டிச. 23)

திருகோணமலை மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக பாலின உணர்திறனை மேம்படுத்தல் என்ற தொனிப் பொருளில், செயலமர்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

குறித்த நிகழ்வானது திருகோணமலை நகரில், தனியார் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பாலின அடிப்படையிலான வன்முறைக்கான அணுகல் சேவையை மேம்படுத்துதல் மற்றும் அதற்கான ஆதரவு அமைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான உள்ளடக்கங்களை இந்த செயலமர்வு கொண்டிருந்தது.

குறித்த செயலமர்வில், மாவட்டத்தில் உள்ள, ஒன்பது பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த 31 பொலிஸ் உத்தியோகத்தர்களும், நான்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாலின சமத்துவம், பெண்களின் அதிகாரம், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி, சுகாதாரம், அரசியல், பொருளாதார முடிவெடுக்கும் செயல்முறைகளில் சமஉரிமை, பெண் சமத்துவம், பெண்கள் எதிர்நோக்கும் பாலின ரீதியான சம்பவங்கள் மற்றும் அதனை தடுக்க வேண்டிய அணுகுமுறைகள் உட்பட பல விடயங்கள் வளவாளரால் தெளிவூட்டப்பட்டது. (ஐ)



# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதில் கவனம் !

(கொழும்பு, டிச. 23)
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதில் கவனம் செலுத்தி வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கை சமசமாஜக் கட்சியுடன் மாத்திரம் உடன்படிக்கையை ஏற்படுத்துவதில் மாத்திரம் அவதானம் செலுத்தியுள்ளதாக அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை மற்றும் நிறைவேற்று குழு அண்மையில் கூடி, இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதே பொருத்தமானது என அக்கட்சியில் உள்ளவர்கள் பலரும் கருத்து வெளியிட்டிருந்தபோதும், இந்த நிலைமைகள் எதிர்காலத்தில் மாறலாம் எனவும் சில பிரதிநிதிகள் கருது கின்றனர்.

அத்துடன், பொதுத் தேர்தலின் போது கட்சியில் இருந்து விலகியவர்களை மீண்டும் இணைத்துக்கொள்வது தொடர்பிலும் அண்மையில் நடைபெற்ற நிறைவேற்று குழுவில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதாக கூறப்படுகிறது.

இதன்போது, கட்சியில் இருந்து விலகியவர்களை மீண்டும் இணைத்துக்கொள்வது பொருத்தமானது என பலர் சுட்டிக்காட்டினாலும், மற்றொரு குழு இதற்கு நேர்மாறான கருத்துக்களை தெரிவித்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மீகொடை துப்பாக்கிச் சூடு சம்பவம் சந்தேக நபர்கள் மூவர் கைது

(மீகொடை, டிச. 23)
கடந்த 14ஆம் திகதி மீகொடை, நாகஹவத்தை பிரதேசத்தில் காரில் பயணித்த நபரொருவரை சுட்டுக் கொன்ற குற்றத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களே ஹோமாகம மற்றும் மீகொடை பொலிஸ் பிரிவுகளில் வைத்து நேற்று (22) பிற்பகல் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் 22, 26 மற்றும் 38 வயதுடைய பாதுக்கை மற்றும் மீகொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த 19ஆம் திகதி, இக்குற்றத்துடன் தொடர்புடைய துப்பாக்கிச் சூட்டை நடத்திய சந்தேகநபரையும் அதற்கு உறுதுணையாக இருந்த மற்றுமொரு சந்தேக நபரையும் மேல்மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே ஏனைய 3 சந்தேகநபர்களும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபருடன் இந்தக் குற்றத்தைச் செய்ய வந்தவர் என்பதுடன், மற்றைய இருவரும் இந்த குற்றத்திற்கு உதவியவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல்மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் மீகொடை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொலை மிரட்டல் இருவர் கைது!



(கொழும்பு, டிச. 23)
பெண் ஒருவருக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுத்து கப்பம் கோரிய இரு சந்தேக நபர்கள் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35 மற்றும் 53 வயதுடைய களனி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, கடந்த 4ஆம் திகதி களனி, திப்பிட்டிகொட பிரதேசத்தில் பெண் ஒருவருக்கு வெளிநாட்டில் இருந்து போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் தொலைபேசியில் அழைத்து கொலை மிரட்டல் விடுத்து 10 இலட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதன்போதே குற்றச் செயல்களுக்கு உதவிய சந்தேகநபர்கள் இருவர் நேற்று (22) காலை கிரிபத்கொடை, தலுகம பிரதேசத்திலும், பேலியகொடை, பட்டிய சந்தி பிரதேசத்திலும் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள முப்படையினர் நீக்கம்!

(கொழும்பு, டிச. 23)
கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள முப்படையினரை நீக்கும் தீர்மானம் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால விளக்கினார்.

இதன்படி இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள முப்படையினரையும் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் அதிக செலவு காரணமாக அவர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இன்று முதல் பொலிஸ் அதிகாரிகள் மாத்திரமே முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன் தற்போது பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸாரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது.

முப்படையினர் நீக்கப்பட்ட போதிலும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பில் எவ்வித பிரச்சினையும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு 6 மாதங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படும் எனவும், அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படும் எனவும் அரசாங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# யாழில் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்



(யாழ்ப்பாணம், டிச. 23)
யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றையதினம்(22) உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி குணரத்தினம்(67) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் நான்கு தினங்களாக காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவரை நேற்றையதினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# தேவாலயங்களில் பலப்படுத்தப்படும் பாதுகாப்பு



(கொழும்பு, டிச. 23)
கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, பாதுகாப்பு தொடர்பில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்கதெரிவித்துள்ளார்.

"பாதுகாப்பு மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்காக மேல் மாகாணத்தில் மாத்திரம் 6,500 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். நாடளாவிய ரீதியிலுள்ள 2000க்கும் மேற்பட்ட தேவாலயங்களில் கிறிஸ்மஸ் தினத்தன்று ஆராதனைகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்தந்த பொலிஸ் பகுதிகளில் உள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், உதவி பொலிஸ் கண்காணிப்பாளர், பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தேவாலயங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவில் குழுக்களுடன் ஒருங்கிணைந்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்படுவார்கள்.

உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ஐ)

# மதுரை கலெக்டர் அலுவலகம் அருகே பயிர்களுடன் நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள்!



மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அரிட்டாபட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் டங்ஸ்டன் திட்டத்திற்கு சுரங்கம் அமைக்க இந்துஸ்தான் நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது.

குறித்த அனுமதிக்கு 50-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பல்லுயிர் தளமாக அறிவிக்கப்பட்டுள்ள அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கப்பட்டால் இயற்கை சூழலியல் பாதிக்கப்படுவதோடு விவசாயம் அழிந்து கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் என கிராம மக்கள் டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த திட்டத்திற்கு தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மேலும் டங்ஸ்டன் திட்டத்திற்கு சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து கட்சிகளின் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி விட்டார்.

ஆனால் டங்ஸ்டன் திட்டம் தொடர்பாக மத்திய அரசு தற்போது வரை மௌனம் காத்து வருகிறது. இதனால் மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன.

அதன்படி இன்று மதுரை கலெக்டர் அலுவலகம் அருகில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் நாயக்கர்பட்டி, அரிட்டாபட்டி, வல்லாளப்பட்டி, கிடாரிப்பட்டி, வெள்ளரிப்பட்டி, தெற்கு தெரு, கல்லம்பட்டி, சூரக்குண்டு, எட்டிமங்களம், புளிப்பட்டி உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், பெண்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதில் கலந்து கொண்டவர்கள் கரும்பு, வாழை, நெல், ஏர்கலப்பை ஆகியவற்றை ஏந்தி டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழக அணிவகுப்பு ஊர்தி

### எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் பதில்

குடியரசு தின விழா அணிவகுப்பில் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தி இடம்பெறாதது வெட்கக்கேடான நிலை என்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் பதிவுக்கு அமைச்சர் சாமிநாதன் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியிருப்பதாவது:

தலைநகரில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பு ஊர்திகள் சுழற்சி முறையில் அனுமதிக்கப்படுகிறது. 2 ஆண்டுகள் ஒரு மாநிலத்தின் ஊர்திகள் தொடர்ந்து இடம்பெற்றால் 3-வது ஆண்டில் அனுமதிக்கக்கூடாது.

2023-24-ல் பங்கேற்ற தமிழக அரசின் ஊர்திகள் இனி 2026-ல் தான் பங்கேற்க முடியுமென்பதே மத்திய அரசின் நடைமுறை. இந்த நடைமுறையை மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் ஒரே சீராக பின்பற்றவில்லை.

உ.பி., குஜராத்திற்கு தொடர்ந்து 3-வது முறை அனுமதித்துவிட்டு தமிழ்நாட்டிற்கு மட்டும் அனுமதி மறுப்பது நியாயம் அற்ற செயல். அரசியல் நடைமுறை அறியாமல் உரக்கச் சத்தமிட்டு ஊரை ஏமாற்ற முயல்வது எதிர்க்கட்சி தலைவர் இபிஎஸ்-க்கு கைவந்த வேலை எனவும் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு ஆக்கப்பூர்வ யோசனை, கருத்துகளை கூறி எதிர்க்கட்சி தலைவர் பதவிக்குரிய மரியாதையை இபிஎஸ் காப்பாற்ற வேண்டும் என்று மேலும் இதன்போது அவர் கூறியமை குறிப்பிடத்தக்கது.

## 21 மாவட்டங்களில் 400 வகுப்பறை கட்டிடங்கள் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் திறந்து வைப்பு!



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், குழந்தை நேய பாடசாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 171 பள்ளிகளில் 56.11 கோடி ரூபாய் செலவில் 350 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

அரச பாடசாலைகளில் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் திட்டத்தின் கீழ், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 24 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 8.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் என மொத்தம் 21 மாவட்டங்களிலுள்ள 195 பள்ளிகளில் ரூ.64.44 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டிடங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும் 6 மாவட்டங்களில் 35 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடங்கள் என மொத்தம் 99 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவிலான கட்டிடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பிலான 95 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகிற்கே உணவளிக்கும் விவசாயிகளை போற்றி வணங்குவோம்-டி.டி.வி.தினகரன்!





தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ்தள பதிவில் கூறியிருப்பதாவது:-

"உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது" என்ற வரிகளுக்கு ஏற்ப வரவு-செலவு பார்க்காமல் உழவுதையும், உழைப்பதையுமே தன் வாழ்நாள் பணியாக கொண்டிருக்கும் விவசாயிகள் அனைவருக்கும் எனது தேசிய விவசாயிகள் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை, புயல், வெள்ளம், வறட்சி என எத்துனை பேரிடர்களை சந்தித்தாலும் தங்களின் கடின உழைப்பின் மூலம் உலகிற்கே உணவளிக்கும் மகத்தான சேவையில் இடைவிடாது ஈடுபட்டுவரும் விவசாயப் பெருமக்கள் அனைவரையும் இந்நாளில் போற்றி வணங்கிடுவோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## அரசு ஊழியரின் சொத்துக்கள் தனிப்பட்ட விவரங்கள் அல்ல- உயர் நீதிமன்றம்!

கிருஷ்ணகிரி மாவட்ட நீர்வளத்துறை உதவிப் பொறியாளர் காளிப்பிரியனின் சொத்து விபரங்களை குறித்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து காளிப்பிரியனின் சொத்து விபரங்களை தெரிவிக்கும்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை இன்று விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன், அரசு ஊழியர்களின் பணியை பாதிக்கச் செய்யும் தகவல்கள்தான் பாதுகாக்கப்பட்டவை. ஆனால், சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்பட வேண்டும். அரசு ஊழியரின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த விவரங்கள், தனிப்பட்ட விவரங்கள் அல்ல என்று கூறிய நீதிபதி இந்த வழக்கை 2 மாதங்களில் பரிசீலித்து முடித்துவைக்க மாநில தகவல் ஆணையத்திற்கு உத்தரவிட்டார்.



# இளையராஜாவின் சுயமரியாதை!

- மாரிமுத்து -

> இளையராஜாவே ஒரு கடவுள். ஆனாலும் கருவறைக்குள் எல்லோரும் போக முடியாது என்கிறார் ”அந்தப்புறப் பேச்சு”ப் புகழ் கஸ்தூரி. ஒருமுறை பெரியார் திடலில் இளைய ராஜாவுக்குப் பாராட்டு விழா நடந்தது. சிம்பொனி இசையமைத்ததற்காக பெரியார் தமிழிசை மன்ற நா.அருணாச்சலம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி. பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை போட அழைத்தார்கள். “முடியாது நான் கடவுள் நம்பிக்கைக்காரன். பெரியாருக்கு எப்படி மாலை போட முடியும்” என்றார் இசைஞானி.

“ஆண்டாள் கோயிலில் ஒன்றும் நடக்கவில்லை. எல்லாம் வீண் வதந்தி. அப்படியெல்லாம் என் சுயமரியாதையை விட்டுவிட மாட்டேன், ரசிகர்களே நம்புங்கள்” என்கிறார் இளையராஜா.

தொலைக்காட்சிகள் அர்த்த மண்டபத்துக்கு வெளியே அவர் நிற்பதை ஒளிபரப்புகின்றன. அவருடன்நின்றஜயர்மட்டும்மண்டபத்துக்குள்ளே நுழைவதையும் கமராக்கள் காட்டுகின்றன. வதந்திகள் எப்படி கமராவுக்கள் நுழைந்தது என்று கேட்காதீர்கள்.

இளைய ராஜாவே ஒரு கடவுள். ஆனாலும் கருவறைக்குள் எல்லோரும் போக முடியாது என்கிறார் ”அந்தப்புறப் பேச்சு”ப் புகழ் கஸ்தூரி.

ஒருமுறை பெரியார் திடலில் இளைய ராஜாவுக்குப் பாராட்டு விழா நடந்தது. சிம்பொனி இசையமைத்ததற்காக பெரியார் தமிழிசை மன்ற நா.அருணாச்சலம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி. பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை போட அழைத்தார்கள். “முடியாது நான் கடவுள் நம்பிக்கைக்காரன். பெரியாருக்கு எப்படி மாலை போட முடியும்” என்றார் இசைஞானி.

சுயமரியாதை இயக்கத்தலைவர் பெரியாருக்கு தனது சுயமரியாதையைக் காப்பாற்ற மாலை போட மறுத்தவர். இப்போது அர்த்த மண்டப அவமானத்தை அப்படியே துடைத்தெறிந்து விட்டு, நான் சுயமரியாதைக்காரன் என்கிறார்.

”நான் என்னையே கடந்து விட்டேன். என்னுடைய ஆன்மீகம் அவமானத்தைப் புறந்தள்ளி விடும்” என்பதே இளையராஜா கருத்தாக இருக்கும் என்று எதிர்ப்பார்த்தோம். அவர் ஏமாற்றவில்லை. அவமானத்தைத் ஆன்மீகத்தால் துடைத்துக் கொண்டார்.

“பெரியார் திரைப்படத்திற்கு இசையமைக்க முதலில் ஒப்புக்கொண்ட இளையராஜா, பிறகு மறுத்து விட்டார். பெரியாரை மறுப்பார், ஐயர்களின் அவமதிப்பை தலை வணங்கி ஏற்பார். இதில் தான் அவரது சுயமரியாதையே அடங்கியிருக்கிறது.

திருவரங்கம் கோயில் கோபுரம் கட்ட 8 லட்சம் நிதி திரட்டினார். அந்தக் கோபுர விமானத்தில் ஏறுவதற்குக் கூட அனுமதிக்கவில்லை. கோபுரம், கர்ப்பகிரகமோ, அர்த்த மண்டபமோ அல்ல, சூத்திரர்கள் கோயிலுக்குள் நுழையாமல் வீதியில் நின்று தரிசிக்க கண்டுபிடிக்கப்பட்டது தான் கோபுரம்.

அம்பேத்கர் என்ற பெயரை அவர் உச்சரித்ததே இல்லை. திடீரென்று ஒருமுறை அம்பேத்கர் பெயரைக் கூறினார். பிரதமர் மோடி அம்பேத்கரைப் போன்றவர் என்றார். அது என்னப்பா திடீர் பாசம்? பிறகு தான், பா.ஜ.க. அறிவிப்பு வந்தது. மாநிலங்களவை உறுப்பினர் பதவி என்ற அறிவிப்பு வந்தது. மாநிலங்களவையில் அவர் இருக்கையில் சென்று ஒருமுறையாவது அமர்ந்தாரா என்பது தெரியவில்லை. அவரது ஆன்மீகம் தடை செய்திருக்கலாம் ஆன் மீகம் பதவியை ஏற்கும். ஆனால் பதவிக்கான கடமையை மறுக்கும்.

ஆன்மீகத்துக்கு பொருளியல் சக்தி உண்டா என்பது பற்றி நமக்குத் தெரியவில்லை. தன்னுடைய பாடலை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் வெளிநாட்டு நிகழ்ச்சிகளில் பாடியதற்காக உரிமைத்தொகை கேட்டார். ஆனாலும் பாடலைக் கேட்டு கைதட்டி மகிழ்ந்த ரசிகர்களும், ஒவ்வொரு கைதட்டலுக்கும் கணக்கிட்டு உரிமைத் தொகை கேட்காமல் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதைப் பாராட்டத்தான் வேண்டும். அதற்காக நீதிமன்றம் வரை சென்றது அவரது ஆன்மீகம். இசை அமைப்புக்காக படத் தயாரிப்பாளரிடம் ஊதியம் வாங்கியாகி விட்டது. பிறகு பாடலை பாடும் போது எனக்கான உரிமைத் தொகையை எடுத்து வை என்று கேட்பது ஆன்மீகமா? வணிகமா? என்று கேட்கக் கூடாது. அவரது உடன்பிறந்த தம்பி கங்கை அமரனே கொதித்து எழுந்தார்.

மோடியை அம்பேத்கருடன் ஒப்பிட்ட ஒரு மாதத்திலேயே அவரது மகன் யுவன் சங்கர் ராஜா, “நான் ஒரு கருப்பு திராவிடன் பெருமைமிகுத் தமிழன்” என்று முகநூலில் பதிவிட்டார். இப்படிப் பல சுயமரியாதைக் குடும்பக் கதைகள் இருக்கின்றன.

“உயிர் போன பிறகு மீண்டும் உயிர்பெற்று வந்தவர் ரமண மகிரிஷி மட்டும் தான். இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது பொய்” என்று ஒரு பேட்டியளித்தார். அவரது ஆன்மீகம் அறிவியல் வரை இப்படி பரந்து விரிந்தது. மீண்டும் உயிர்த்தெழுந்த ரமண மகரிஷி இப்போது இளையராஜா இதயத்தில் மட்டும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பார் என்று நம்புவோம்.

“புது ராகம் படைப்பதாலே நானும் இறைவனே” -இது இளையராஜாவின் பாடல். இப்படி புது ராகம் படைத்து இசைக்கு அவர் “இறைவனாக” உரிமைக் கோரலாம். அவருக்கு முழுத் தகுதி உண்டு. ஆனால் அவர் பேசும் ஆன்மீகம் தான் சகிக்க முடியவில்லை.

# கிறிஸ்துமஸ் இலவச உணவு..
# கூட்டநெரிசலில் குழந்தைகள் உட்பட 67 பேர் பலி
# பட்டினித் துயரில் தவிக்கும் நைஜீரியா



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடுமையான பஞ்சம் நிலவி வருகிறது. பட்டினியால் மக்கள் குறிப்பாக குழந்தைகள் கடும் சிரமங்களை சந்தித்து வளர்கின்றனர்.

இந்நிலையில் கிறிஸ்துமஸை முன்னிட்டு கடந்த வாரம் நைஜீரியாவின் பல்வேறு நகரங்களில் உணவு வழங்கும் நிகழ்வின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 67க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஓயோ மாநிலத்தில் கடந்த புதன்கிழமை 35 குழந்தைகள் வரை கொல்லப்பட்டனர். சனிக்கிழமையன்று, தென்கிழக்கு அனம்ப்ரா மாநிலத்தில் 22 பேர் இறந்தனர்,

தலைநகர் அபுஜாவில் 10 பேர் இறந்தனர், அபுஜாவில் தேவாலயத்தில் வைத்து வழங்கப்பட்ட உடைகள் மற்றும் உணவைப் பெற 1,000 க்கும் மேற்பட்ட மக்கள் கூடினர்.

இந்த சம்பங்கள் குறித்த முழுமையான விசாரணைக்கு நைஜீரிய அரசு உத்தர விட்டுள்ளதையடுத்து இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஜனாதிபதி போலா டினுபு, வரவிருக்கும் அனைத்து கொண்டாட்டங்களையும் இரத்து செய்துள்ளார்.

இந்த துயரங்களுக்கு நாட்டில் நிலவும் அதிகப்படியான வறுமை, அதிக உணவு விலைகள் மற்றும் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளே காரணம் என்று தொழிலாளர் கட்சித் தலைவர் பீட்டர் ஒபி குற்றம் சாட்டியுள்ளார்.

## எலான் மஸ்க் அமெரிக்க அதிபர் ஆவாரா? என்ற கேள்விக்கு பதிலளித்த டிரம்ப்



அரிசோனாவின் பீனிக்ஸ் நகரில் நடந்த குடியரசுக் கட்சி மாநாட்டில் நேற்று டொனல்டு டிரம்ப் கலந்துகொண்டார். இந்நிலையில் வரவிருக்கும் டிரம்ப் நிர்வாகத்தில் பெரும் ஆதிக்கம் செலுத்த உள்ள உலகப் பணக்காரர் எலான் மஸ்க் ஒரு நாள் அதிபராக முடியுமா? என்று டிரம்பிடம் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு டிரம்ப், இல்லை, அது நடக்காது என்று பதிலளித்தார். தொடர்ந்து பேசிய அவர், அவர் ஏன் இருக்க முடியாது என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் இந்த நாட்டில் பிறக்கவில்லை என்று டிரம்ப் கூறினார்.

அமெரிக்க அரசியலமைப்பின் படி அமெரிக்காவிற்கு ஜனாதிபதியாக வேண்டுமானால் அவர் அமெரிக்க குடிமகனாக இருக்க வேண்டும்என்று கூறுகிறது. டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ், எக்ஸ் உள்ளிட்டவற்றின் முதலாளியான உலகின் முதல் பணக்காரர் எலான் மஸ்க் தென் ஆபிரிக்காவில் பிறந்தவர் ஆவார்.

அவர் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர் என்று பைடன் நிர்வாகம் சமீபத்தில் குற்றம் சாட்டியிருந்தது. கடந்த நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற அதிபர் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற 277 மில்லியன் டாலர்கள்வரை மஸ்க் பணத்தை வாரி இறைத்துள்ளார்.

இதற்காக அவருக்கு அரசு செயல்திறன் தொடர்பான புழுஏநுசுஆநுவே ழுகு நுகுகுஐ-ஊஐநுஊேஊலு பதவி வழங்கப்பட்டுள்ளது. எக்ஸ் தளத்தில் 200 மில்லியன் பின் தொடர்பவர்களை கொண்ட மஸ்க்கை, பிரசிடெண்ட் மஸ்க் என குறிப்பிட்டு ஒரு கூட்டம் சமூக வலைதளத்தில் வைரல் செய்து வந்த நிலையில் இந்த விவகாரம் தற்போது டிரம்ப் வரை சென்றுள்ளது.

இதற்கிடையே அரசு நிதியுதவி திட்டத்துக்கு எதிராக மஸ்க் போர்க்கொடி தூக்கியுள்ளதும் டிரம்ப் உடைய ஜனநாயக கட்சியினரிடையே புகைச்சலை ஏற்படுத்தி உள்ளது.

## பிரேசிலில் வீட்டின் மீது விமானம் விழுந்து விபத்தில் 10 பேர் பலி!



பிரேசில் நாட்டின் ரியோ கிராண்ட் டு சுல் மாகாணத்தில் இருந்து சிறிய ரக விமானம் சாலொ பாலோ மாகாணத்திற்கு நேற்று சென்று கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 10 பேர் பயணித்தனர்.

இந்நிலையில், கிராமடோ நகர் அருகே பறந்துகொண்டிருந்தபோது திடீரென விமானம் கட்டுப்பாட்டை இழந்து சாலொ பாலோ மாகாணத்தில் அமைந்துள்ள சுற்றுலா நகரமான கிராமடோ நகரில் உள்ள வீட்டின் மீது விழுந்தது.

கீழே விழுந்த விமானம் தீப்பற்றி எரிந்த விபத்தில் அதில் பயணம் செய்த 10 பேரும் பரிதாபமாக உடல் கருகி உயிரிழந்தனர். அதேவேளை வீட்டில் இருந்த 2 பேர் படுகாயம் அடைந்தனர்.

விபத்து குறித்து சம்பவ இடத்துக்கு மீட்புக்குழு விரைந்து வந்தனர். அவர்கள் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். விபத்து குறித்து மேலதிக விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## திருநங்கை' பைத்தியக்காரத்தனத்தை ஒழிப்பேன்.. ஆண்–பெண் பாலினத்துக்கு மட்டுமே அனுமதி – டிரம்ப்!




பழமைவாதியான டொனல்டு டிரம்ப் கடந்த நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார். அடுத்த மாதம் இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக பதவி ஏற்கவிருக்கும் டிரம்ப் பல அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

இதன்படி கடந்த 2016 முதல் 2020 வரையிலான டிரம்ப்பின் ஆட்சி காலத்தில் மக்கள் கடும் கட்டுப்பாடுகளை சந்தித்த நிலையில் இனி வரும் 4 வருடமும் அப்படியே அமையும் என்பதை அவரது முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

அந்த வகையில் நேற்று அரிசோனாவின் பீனிக்ஸ் நகரில் நடந்த இளம் பழமைவாதிகளுக்கான குடியரசுக் கட்சி மாநாட்டில் பேசிய டொனால்டு டிரம்ப், அதிபர் பதவி ஏற்கும் நாள் முதல் திருநங்கைகள் என்ற பைத்தியக காரத்தனத்தை நிறுத்தப்போவதாக தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் பாலியல் சிதைவை நிறுத்தவும், திருநங்கைகளை இராணுவத்திலிருந்து வெளியேற்றவும், பாலர் பாடசாலைகள் , நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் இருந்து அவர்களை வெளியேற்றும் நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திடுவேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ஆண்களை பெண்கள் விளையாட்டுகளில் இருந்தும் அவர்களை விலக்கி வைப்பதாக அவர் சபதம் செய்தார். ஆண் மற்றும் பெண் என்ற இரு பாலினங்கள் மட்டுமே அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ கொள்கையாக இருக்கும் என்று டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மூன்றாம் பாலினத்தவரான டுபுடீவுஞ சமூகத்தினரின் உரிமைகளுக்கு எதிராக அதிக அழுத்தம் கொடுக்கும் வகையில் அவர் பேசியுள்ளார். டுபுடீவுஞ பிரச்சினைகள் சமீபத்திய ஆண்டுகளில் அமெரிக்க அரசியலை பெரிதும் தாக்கம் செலுத்தி வரும் நிலையில் அவர் குறித்த முடிவுகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முறைகேடாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, கொழும்பு-தெற்கு பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், தேசிய அடையாள அட்டை வைத்திருக்காத காரணத்துக் காகவே அவரைக் கைது செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளா போதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறு செய்தமை நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ்.பி கே.பி. மனதுங்க தெரிவித்துள்ளார். (ஐ-05)

## தவணை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி 24ஆம் திகதியுடன் நிறைவடையும் என அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உள்ளூராட்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு தேர்தல் ஆணைக்குழு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சிடம் அண்மையில் கோரியிருந்தது.

உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலுக்காக முன்னதாக பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தது. அதன்படி,தேர்தலுக்காகப் புதிய வேட்புமனுக்களைக் கோருவதற்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-05)

## சொன்னது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துமீறிய குடியேற்றம் நிறுத்தப்படும்.

ஆட்சிக்கு வந்ததும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு முடிவைத் தருவோம் என சில வாக்குறுதிகள் அளித்தனர். ஆனால் மயிலத்தமடு, மாதவனை மேச்சல் தரை பிரச்சனை வருடக் கணக்காக பயன்படுத்திய கால்நடை உரிமையாளர்கள் இன்று வரை வீதியில் உட்காந்திருக்கின்றனர்.

அதேபோன்று அரசியல் கைதிகள் ஒருவர் கூட இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை அதேபோன்று வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் ஆயிரக்கணக்கான காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர் அவ்வாறு திணைக்களங்களான பாடசாலை போன்றவற்றின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது இவைகள் எதுவும் இதுவரை விடுவிக்கப்படவில்லை இவ்வாறு வடகிழக்கு தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

ஆனால் தெற்கில் ஊழலுக்கு எதிராக ஆட்சி என கடந்த காலத்தில் ஊழல் செய்தவர்களின் பெயர்பட்டியல் வெளியிடப்ப டுகின்றது.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பண ஊழல் செய்த அரசியல்வாதிகள் மற்றும் விமானப்படையின் விமானங்களை பயன்படுத்திய அமைச்சர்களின் பெயர்கள் வெளியிடப்படுவதுடன் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்படுகின்றது.

அவ்வாறே 2015 தொடக்கம் 2020 வரை ஜனாதிபதி ஊடகப்பிரிவிலே இருந்து கோடிக்கணக்கான பொருட்கள் மாயமாகியுள்ளதை கண்டுபிடிக்கப்படுகின்றது. இவ்வாறு எதிர்காலத்தில் தாங்கள் அரசியல் ரீதியாக பலமாக இருக்கவேண்டும் என அரசியல் ரீதியாக சில விடயங்கள் நடைபெறுகின்றது

எனவே தெற்கிலே பலமாக இருக்கவேண்டும் என நினைப்பவர்கள் கடந்த கால தேர்தல்களில் வடகிழக்கில் இவர்களை நம்பி கணிசமான வாக்களித்த வடகிழக்கு தமிழ் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறந்தவண்ணமாக இருக்கின்றது

எனவே ஜனாதிபதி கடந்தவாரம் இந்தியா சென்றிருந்தார் அப்போது வடகிழக்கு தமிழ் மக்களுக்கான தீர்வை கொடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம் என்று சொன்ன இந்திய பிரதமர் மோடி நாங்கள் தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றாக ஒற்றுமையாக ஒரே கட்சியில் ஒரே கூட்டணியில் பயணித்திருந்தால் கணிசமான பிரதிநிதித்துவத்தை பெற்றிருந்தால் ஒரு பலமான அழுத்தத்தை மோடி ஜனாதிபதிக்கு கொடுத்திருப்பார் எனவே இவற்றை நாங்கள் கருத்தில் கொண்டு ஒரு பலமான ஒரே சக்தியாக தமிழ் மக்களுக்காக செயற்படவேண்டும்.

18 பேர் கொண்ட ஒரு செயலணியை ஜனாதிபதி நியமித்துள்ளார் தெரிந்தே அல்லது தெரியாமல் செய்கின்றாரே என விளங்கவில்லை ஆனால் கோட்டாபய ராசபக்ச ஜனாதிபதியாக வந்ததும் சிறுபான்மை சமூகங்களை எப்படி கணிப்பிட்டாரோ அந்த கணிப்பில் எந்தவித மாற்றமும் இல்லாமல் ஜனாதிபதியும் அவருடைய கட்சியும் நடாத்துகின்றது

கோட்டாபய காலத்தில் தொல்பொருள் என்ற செயலணியை நியமித்தார். அதில் பௌத்த பிக்குகளும் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகள் என எந்தவிதமான நிபுணத்துவமும் இல்லாத 11 பேர் நியமிக்கப்பட்டனர்.

அனுரவுக்கு கணிசமானளவு தமிழ், முஸ்லீம் மக்கள் வாக்களித்துள்ளனர் என்பதை உணர்ந்து கொண்டு எதிர்காலத்திலே இந்த நாடு ஒரே நாடு நாங்கள் எல்லாம் சமத்துவமான மக்கள் என வாய்கிழிய கூறும் இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் இப்படியான தவறுகளை விடாமல் நடக்கவேண்டும்.

அதேவேளை 2018 ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமையில் 5 வாக்கு 10 வாக்கு எடுத்தவர்களும் ஒரு உறுப்பினர்களாக வந்து மன்றங்களில் குழப்பநிலை ஏற்படுத்தும் நிலை இந்த முறையில் தங்கியுள்ளது. எனவே இந்த சட்டமூலத்தை கொண்டுவந்த அரசாங்கம் கூட குளறுபடியான சட்டமூலம் என ஏற்றுக் கொண்டது எனவே இந்த சட்டமூலத்தை திருத்தி விகாதாசார முறையே அல்லது வட்டாரங்களை மட்டும் உள்ளடக்கிய ஒரு புதிய முறையை கொண்டுவந்தால்தான் உள்ளுராட்சி மன்றங்கள் ஒழுங்காக ஆட்சியமைக்கப்பட்டு ஒழுங்கான முறைக்குவரும் என தெரிவித்தார். (ஐ-115)

# அரிசிக்கான சுங்க வரியை குறைக்குமாறு கோரிக்கை



(கொழும்பு, டிச. 23)

இறக்குமதி அரிசி மீதான சுங்கவரியைக் குறைக்குமாறு வர்த்தகர்கள் பலரும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போதைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி ஒரு கிலோ வுக்கு 65 ரூபா சுங்க வரியாக விதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரி குறைக்கப்பட்டால் அரிசி கட்டுப்பாட்டு விலையினை தொடர்ந்து பேண முடியுமென வர்த்தகர்களைப் போன்றே நுகர்வோர் அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

சுமார் 2 மாதங்களாக நிலவி வரும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக அரிசி இறக்குமதிக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், டிசம்பர் 20ஆம் திகதி வரை 67,000 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி அரிசி மொத்த சந்தைக்கு வந்ததன் பின்னர் நிலவிய அரிசி தட்டுப்பாடு ஓரளவுக்கு தணிந்துள்ள போதிலும், இன்னும் சந்தையில் போதியளவு அரிசி இல்லை என சில பிரதேசங்களில் இருந்து அறியமுடிகிறது. (ஐ)

# புதையல் தோண்டும் இயந்திரத்தை கைவிட்டுத் தப்பிச் சென்ற கும்பல்

(முல்லைத்தீவு, டிச. 23)

முல்லைத்தீவு மாங்குளம் அருகே நவீன கார் ஒன்றுடன் சக்திவாய்ந்த புதையலைக் கண்டறியும் இயந்திரமொன்றையும் இன்னும் சில கருவிகளையும் கைவிட்டு தப்பிச் சென்ற கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாங்குளம், கனகராயன்குளம் அருகே மர்ம நபர்கள் கும்பல் ஒன்று புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் அப்பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை மாலை தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது புதையல் தோண்டுவதற்கான சக்திவாய்ந்த மெட்டல் டிடெக்டர், மடிக்கணனி ஒன்று, உள்ளிட்ட உபகரணங்களுடன் கார் ஒன்றையும் கைவிட்டு மர்ம கும்பல் தப்பிச் சென்றிருந்தது.

காரையும், குறித்த உபகரணங்களையும் கைப்பற்றிய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் , தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசேட விசாரணைகளைகளின் பின்னர் ஆறு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 22, 25, 37, 46 மற்றும் 53 வயதுடைய கலன்பிந்துவெவ, வவுனியா, பலாங்கொடை மற்றும் வெயாங்கொடை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. (ஐ)

## டிஜிற்றல்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதமளவில் கைச்சாத்திடப்படவுள்ளது என்றும், தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும், உதவிகளை வழங்குவதற்கென இந்திய வல்லுநர்கள் குழு ஒன்று அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ஐ-05)

# பழைய கட்டடங்களை புனரமைக்கும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம், டிச. 23)

2025இல் பழைய கட்டடங்களை புனரமைப்பதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகின்ற நிலையில் அதற்கு தங்களது ஒத்துழைப்பும் இருக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையால் உள்ளூர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 52.5 மில்லியன் ரூபா செலவில் மீன் நிர்மாணம் செய்யப்பட்ட பண்ணை மீன் சந்தைக் கட்டடம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்றுமுன்தினம் (21.12.2024) திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த ஆளுநர் "யாழ்ப்பாணம் கடந்த காலங்களில் தூய்மையான நகரமாக இருந்தது. இன்று மோசமாக இருக்கின்றது. தூய்மையான அழகான நகரமாக மாற்றியமைக்கும் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

மேலும், இந்த மீன் சந்தை மிகவும் கஷ்டப்பட்டே கட்டியதாகக் கூறினார்கள். இதை எப்படி நாங்கள் பயன்படுத்தப்போ-



கின்றோம் என்பதில்தான் இது அமைக்கப்பட்டமையின் வெற்றி தங்கியிருக்கின்றது. இது உங்களுக்குரிய கட்டடம். இதை தூய்மையாக வைத்துப் பராமரிப்பது உங்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பு. நீங்கள் அவ்வாறு பராமரிப்பீர்களாக இருந்தால் அதிகளவு நுகர்வோர்கள் உங்களைத் தேடி வருவதற்கான வாய்ப்பும் இருக்கின்றது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாநகர சபை ஆணையாளர், யாழ்ப்பாண பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2024 இல் வெளியிடப்பெற்றது.